செய்தி வெளியீடு

செ.வெ.எண். 01 நாள்:01.12.2017

## நீலகிரி மாவட்டம் உதகை ஒய்.பி.ஏ கூட்டரங்கில் இன்று (01.12.2017) மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் சார்பில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழக அரசு பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து அதை செம்மையாக செயல்படுத்தி வருகிறது. அதேபோல பெண்களுக்கென்று திருமண நிதியுதவி உதவித் திட்டத்தை அறிவித்து ஏழை பெண்களுக்கு தாலிக்கு தங்கமும், திருமண நிதியுதவியும் வழங்கும் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மேலும் டாக்டர் முத்துலெட்சுமி மகப்பேறு நலஉதவித்திட்டத்தில் 19 வயது அதற்கு மேலுள்ள கர்ப்பினி பெண்களுக்கு மகப்பேறு உதவித்தொகை வழங்கப்படுகிறது. அரசு மருத்துவமனைகளில் கர்ப்பிணி பெண்களுக்கு தடுப்பூசி மற்றும் பிரவசவத்திற்கான நவீன வசதிகளுடன் மருத்துவம் பார்க்கப்படுகிறது. பிறந்த குழந்தைகளுக்கு முத்தடுப்பூசி மூன்று தடவை போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. அதன் பிறகு குழந்தை பிறந்தவுடன், குழந்தை நல பரிசுப் பெட்டகம் என்ற திட்டத்தின்கீழ், குழந்தைகளுக்கு உடுத்த உடை, பொம்மை, துண்டுகள், கொசுவலை, நாப்கின், பவுடர், சோப்பு மற்றும் இதரப் பொருட்களை வழங்கி தாயும் சேயும் ஆரோக்கியமாகவும், சுகாதாரமாகவும் இருக்க வழிவகை செய்துள்ளது. மேலும் கர்ப்பிணி பெண்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், அரசு மருத்துவமனைகளிலும் சத்துமாவு வழங்கப்படுகிறது. கர்ப்பிணிகள் குழந்தைகளை நல்ல பழக்க வழக்கங்களுடனும், கல்வி அறிவுடனும் வளர்க்க வேண்டும் என உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் கூறினார்.

அதனைத் தொடர்ந்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் சார்பில்‘‘கர்ப்பிணி பெண்களுக்கு மஞ்சள், குங்குமம், பூ, மற்றும் வளையல் அணிவித்து ஐவகை உணவு, இனிப்பு, பழம் ஆகியவை வழங்கி சமுதாய வளைகாப்பு – நடத்தப்பட்டது. மேலும் ‘‘குழந்தைகளுக்கு ஆரோக்கிய பூரிப்பு’’ என்ற நூலினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கர்ப்பிணி பெண்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.எஸ்.பொற்கொடி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.முகமது யாசர் அராபத் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.